**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி, சேலம்**

**முன்னிலை: திரு. ஆர். ராதாகிருஷ்ணன், பி.எ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்ககிரி.**

2024-ஆம் வருடம் ஜனவரி மாதம் 31-ஆம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவராண்டு 2054, சோபகிருது வருடம், தை திங்கள் 17 ம் நாள் புதன்கிழமை

**(சேலம், கோடைவிடுமுறைக்கால சிறப்பு அமர்வு உரிமையியல் நீதிமன்ற மனு எண்.2/2023 இன் அ.வ.எண்.315/2023)**
**(சங்ககிரி சார்புநீதிமன்ற மனு எண்.2/2023 இன் அ.வ.எண்.117/2023)**

<u>**இ.ம.எண்.1/2023 இன் அ.வ.எண். 87/2023**</u>

M. விஜயா ... மனுதாரர் / வாதி

//எதிராக //

1. செல்வம்
2. சுரேஷ்
3. மணிகண்டன் ... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இந்த மனுவானது மாண்புமிகு கோடை விடுமுறைக்கால சிறப்பு அமர்வு உரிமையியல் நீதிமன்றத்தில் இ.ம.எண்.2/2023 இன் அ.வ.எண்.315/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்பு மாண்புமிகு சங்ககிரி சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இ.ம.எண்.2/2023 இன் அ.வ.எண்.117/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்பு ஆள்வரையின் காரணமாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் சங்ககிரிக்கு மாற்றம் செய்யப்பட்டு, இ.ம.எண்.1/2023 இன் அ.வ.எண்.87/2023 ஆக இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 04.01.2023 ஆம் தேதி இறுதியாக என் முன்பு விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர்கள் திரு. J. கோபிநாத் மற்றும் திருமதி. R. மலர்கொடி ஆகியோர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர்கள் திரு. K. விஜயமூர்த்தி மற்றும் திருமதி. V. தாணுபிரபா ஆகியோர்கள் ஆஜராகியும், மனுவுரை, எதிருரை மற்றும் வழக்கு கோப்புகளை ஆராய்ந்தும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டறிந்தும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>**உத்தரவு**</u>

மனுதாரர்/ வாதி இந்த மனுவை உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை XXXIX, விதி 1 & 2 ன் கீழ் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளோ, அவர்களது ஆதரவாளர்களோ, குடும்ப உறுப்பினர்களோ வழக்கு சொத்தில் வாதி விவசாயம் செய்து அனுபவம் செய்து வருவதை எந்தவகையிலும் இடையூறு செய்யக்கூடாது என்று இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-</u>**

(i) மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மனுதாரர்/வாதியால் அசல் வழக்கானது பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி இந்த மனுதாரரின் சகோதரர் பொன்னுசாமியின் மகனாவார். 2,3 பிரதிவாதிகள் பொன்னுசாமியின் பேரன்கள் ஆவார்கள். வழக்கு முதலாம் அயிட்ட சொத்தை இந்த மனுதாரரும், சித்தன் மகன் ரகுபதி ஆகியோர்கள் சேர்ந்து மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.4477/2014 ன்படி கடந்த 13.09.2014 ஆம் தேதியன்று மனுதாரரின் தகப்பனாரான கந்தசாமி கவுண்டரிடமிருந்து கிரையம் பெற்றார்கள். இந்த மனுதாரருடன் கிரையம் பெற்ற ரகுபதியிடமிருந்து வழக்கு 2ம் அயிட்ட சொத்தை மகுடஞ்சாவடி அலுவலக ஆவண எண்.3977/2020 ன்படி இந்த மனுதாரர் கிரையம் பெற்றார். கிரையம் பெற்ற சொத்துக்களை கிரையம் பெற்ற தேதியிலிருந்து இந்த மனுதாரர் அனுபவம் செய்து வருகிறார். மனுதாரர் கிரையம் பெற்ற விவசாய நிலங்களில் பருவத்திற்கு ஏற்ப பயிர் செய்து விவசாயம் செய்து வருகிறார். மனுதாரர் கிரையம் பெற்ற நிலங்களுக்கு அருகே மனுதாரரின் சகோதரர்களான பொன்னுசாமி, ராஜா, சேகர் மற்றும் சகோதரர்களின் வாரிசுகளுடன் பிரதிவாதிகளும் வசித்து வருகிறார்கள். மனுதாரர் கிரையம் பெற்ற நிலங்களில் பயிரிடும் பயிர்களை பிரதிவாதிகள் மனுதாரர் இல்லாத சமயத்தில் சேதப்படுத்துவதையும், ஆடு, மாடுகளை வைத்து சேதப்படுத்துவதையும் தொடர்ந்து செய்து வந்ததால் மனுதாரர் கிரையம் பெற்ற சொத்தை பாதுகாப்பதற்காக கடந்த 10.02.2022 ம் தேதியன்று வழக்கு சொத்துக்களை பாதுகாக்க கம்பி வேலி அமைக்க முற்பட்டார். அந்தசமயத்தில் பிரதிவாதிகள் கம்பிவேலி அமைக்கக்கூடாது என்று தகராறு செய்து தடுத்துவிட்டார்கள். இது குறித்து மனுதாரர் சங்ககிரி காவல் துறை கண்காணிப்பாளரிடம் கடந்த 11.02.2022 ஆம் தேதியன்று புகார் கொடுத்தார். மேற்கண்ட புகார் குறித்து விசாரணை செய்த காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களிடம் பிரதிவாதிகளும், அவர்களது குடும்பத்தாரும் இனிமேல் நான் விவசாயம் செய்யும் நிலத்தில் கம்பி வேலி அமைப்பதை தடுக்க மாட்டோம் என்றும், விவசாயம் செய்யும் பயிர்களை சேதப்படுத்த மாட்டோம் என்றும் உறுதி கூறி சென்றுவிட்டார்கள்.

(ii) மனுதாரர் வழக்கு சொத்துக்களில் தொடர்ந்து விவசாயம் செய்து வருகிறார். வழக்கு சொத்திற்கு கம்பி வேலி அமைப்பதற்காக கடந்த 18.03.2023 ம் தேதியன்று காலை 10 மணிக்கு வழக்கு சொத்திற்கு சென்ற போது வழக்கு சொத்தில் கம்பி வேலி அமைக்கக்கூடாது என்று பிரதிவாதிகள் மீண்டும் தகராறு செய்து நிறுத்திவிட்டார்கள். அது குறித்து மனுதாரர் சங்ககிரி காவல் ஆய்வாளர் அவர்களிடம் கடந்த 23.03.2023 ஆம் தேதியன்று கம்பி வேலி அமைக்க உரிய பாதுகாப்பு

வழங்கும்படி புகார் கொடுத்தபோது, அவர் உரிமையியல் வழக்காக இருப்பதால் நீதிமன்றத்திற்கு சென்று பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தியதால் மனுதாரர் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்தில் மனுதாரருக்கு உரிமையும், பாத்தியதையும் நலனும் உள்ளது. வழக்கு சொத்தில் இந்த மனுதாரரை தவிர வேறு யாருக்கும் எந்தவித உரிமையும், பாத்தியமும் இல்லை. பிரதிவாதிகள் ஆள்பலமும், பணபலமும் உடையவர்கள். வாதி பெண் என்பதால் இந்த மனுதாரரை பிரதிவாதிகள் மிரட்டி வழக்கு சொத்திற்கு கம்பி வேலி அமைப்பதை தடுத்து வழக்கு சொத்துக்களை அபகரித்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்பட்டு வருகிறார்கள். அதனால்தான் இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவில் முதல் தோற்ற வழக்கு மனுதாரருக்கு ஆதரவாக உள்ளது. மனுதாரர் இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் பெற முகாந்திரம் உள்ளது. இடைக்கால உத்தரவு இந்த மனுதாரருக்கு ஆதரவாக வழங்காவிட்டால் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்று கூறி இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) 1ம் மனுதாரர்/1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 2,3 எதிர்மனுதாரர்கள்/ 2,3 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-</u>**

(i) மனு பொய்யானது, சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரர்களால் குறிப்பாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

(ii) இந்த வழக்கு சொத்து குறித்து 2ம் பிரதிவாதியின் தந்தையான ராஜா என்பவர் அவரது தந்தை கந்தசாமி கவுண்டர் (இறப்பு), இவ்வழக்கின் வாதியான விஜயா மற்றும் வாதி கிரையம் பெற்றதாக கூறும் ரகுபதி ஆகியோர்கள் மீது ஏற்றதை ஆற்றுதல் மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி சமூகம் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.61/2015 என்ற வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி வழக்கில் இந்த வழக்கின் வாதி ஆஜராகி தனது வழக்குரைஞர் மூலம் வழக்கினை தொடர்ந்து நடத்தி வருகிறார். மேற்கண்ட சங்கதிகளை குறிப்பிட்டால் இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பெற முடியாது என்பதால் தீய எண்ணங்கொண்டு அவற்றை பற்றி வழக்குரையில் கூறாமல் மறைத்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கு எண்.61/2015ன் வழக்குரை மற்றும் வாதி தாக்கல் செய்த பதிலுரை இந்த எதிருரை ஆவணமாக தாக்கல் செய்யப்படுகிறது. வாதி கூறுவது போல் வழக்கு சொத்தில் வாதி அனுபவத்தில் இல்லை. வழக்கு

சொத்தானது வாதியின் அனுபோகத்தில் உள்ளது என்பது தவறான ஒன்றாகும். வழக்கு சொத்து மற்றும் இதர சொத்துக்களில் 2 ம் பிரதிவாதியின் தந்தையான ராஜா, ராஜாவின் சகோதரர்கள் மற்றும் அவர்களது வாரிசுகளிடமே அனுபவம் உள்ளது. மேற்படி நிலங்களை அவர்கள்தான் அனுபவம் செய்து வருகிறார்கள். வாதி தாக்கல் செய்துள்ள பட்டாவானது வாதியின் சகோதரர்களான பொன்னுசாமி, ராஜா மற்றும் சேகர் ஆகியோர்களின் பெயரில் கூட்டாக உள்ளது. மேற்கண்ட நபர்களை வழக்கில் தரப்பினராக சேர்த்தால் ஒருதலைபட்ச உத்தரவு கிடைக்காது என்பதால் அவர்கள் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை. வாதியின் சகோதரர்களான பொன்னுசாமியின் மகன் 1 ம் பிரதிவாதியும், ராஜாவின் மகன் 2 ம் பிரதிவாதியும், சேகரின் மகன் 3 ம் பிரதிவாதியும் ஆவார்கள். மேற்கண்ட சங்கதிகளை கூட வாதி முழுமையாக கூறாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதி அவரது பிரமாணப்பத்திரிக்கையில் 2 வது பத்தியில் " 1 ம் பிரதிவாதி வாதியின் சகோதரர் பொன்னுசாமியின் மகனாவார். 2,3 பிரதிவாதிகள் பொன்னுசாமியின் பேரன்கள் ஆவார்கள்" என்றும், அதே பத்தியில் 12 வது வரியில் " நான் கிரையம் பெற்ற நிலங்களுக்கு அருகே வாதியின் சகோதரர்களான பொன்னுசாமி, ராஜா, சேகர் மற்றும் சகோதரர்களின் வாரிசுகளுடன் பிரதிவாதிகளும் வசித்து வருகிறார்கள்." என்றும் குறிப்பிட்டுள்ளார். வாதி, பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலேயே உறவுமுறையை கூட சரியாக கூறாமலும், மறைத்தும் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

(iii) வழக்கு சொத்துக்கள் அமைந்துள்ள தப்பக்குட்டை கிராமமானது மகுடஞ்சாவடி காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியாகும். வாதி அவரது பிரமாண பத்திரிக்கையின் 4 வது பத்தி 5 வது வரியில் " ஆதலால் வாதி சங்ககிரி காவல் ஆய்வாளர் அவர்களிடம் 23.03.2023 அன்று கம்பி வேலி அமைக்க உரிய பாதுகாப்பு வழங்கும்படி புகார் கொடுத்தார்" என்று கூறியுள்ளார். வாதி தாக்கல் செய்துள்ள ஆவணப்பட்டியல் 4 வது ஆவணமானது சங்ககிரி காவல் ஆய்வாளரிடம் கொடுத்தது போலவே உள்ளது. மேற்படி நிகழ்வுகளே வாதி கூறுவது போல் எந்தவித நிகழ்வுகளும் நடைபெறவில்லை என்பதினை உணர்த்துகிறது. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள 11.02.2022 ம் தேதியிட்ட ஆவணத்தின் 9 வது வரியில் "இவ்வாறு இருக்க எனது சகோதரர் பொன்னுசாமி, மகன்கள் செல்வம், ராஜா, இவரது மகன்கள் சுரேஷ், பிரகாஷ் மற்றும் சேகர் இவரது மகன்கள் மணிகண்டன் எல்லோரும் எனது நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து கொண்டு நிலத்தை விவசாயம் செய்யவிடாமல் தடுப்பதாகவும்" கூறியுள்ளார். அதேபோல் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள 21.03.2023 ஆம் தேதியிட்ட ஆவணத்தின் பொருளில் " எனக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்ட சொத்திற்கு கம்பி வேலி அமைப்பதை தடுக்கும் எனது சகோதரர்கள் பொன்னுசாமி,

ராஜா, சேகர் மற்றும் அவர்களது மகன்களான பொன்னுசாமி மகன் செல்வம், ராஜாவின் மகன் சுரேஷ், சேகரின் மகன் மணிகண்டன் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி மனு" என்று குறிப்பிட்டுள்ளார். உண்மை சங்கதிகளை மறைத்தும், வழககு சொத்து குறித்த முந்தை வழக்கினை மறைத்தும், அவசிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினாலும், வழக்கிற்கு வழக்கு மூலங்கள் இல்லாத காரணத்தினாலும் இந்த மனுவானது அதிகப்படியான செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரையில் கூறப்பட்டுள்ளது.

4) மனு பிரச்சனையை தீர்வு காணும் பொருட்டு மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2 ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

<u>5) தீர்வு:-</u>

இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை XXXIX, விதி 1 & 2ன் கீழ் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளோ, அவர்களது ஆதரவாளர்களோ, குடும்ப உறுப்பினர்களோ வழக்கு சொத்தில் வாதி விவசாயம் செய்து அனுபவம் செய்து வருவதை எந்தவகையிலும் இடையூறு செய்யக்கூடாது என்று இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) மனுதாரர் தரப்பில் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மனுதாரர்/வாதியால் அசல் வழக்கானது பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி இந்த மனுதாரரின் சகோதரர் பொன்னுசாமியின் மகனாவார். 2,3 பிரதிவாதிகள் பொன்னுசாமியின் பேரன்கள் ஆவார்கள். வழக்கு முதலாம் அயிட்ட சொத்தை இந்த மனுதாரரும், சித்தன் மகன் ரகுபதி ஆகியோர்கள் சேர்ந்து மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.4477/2014ன்படி கடந்த 13.09.2014ஆம் தேதியன்று மனுதாரரின் தகப்பனாரான கந்தசாமி கவுண்டரிடமிருந்து கிரையம் பெற்றார்கள். இந்த மனுதாரருடன் கிரையம் பெற்ற ரகுபதியிடமிருந்து வழக்கு 2ம் அயிட்ட சொத்தை மகுடஞ்சாவடி அலுவலக ஆவண எண்.3977/2020ன்படி இந்த மனுதாரர் கிரையம் பெற்றார். கிரையம் பெற்ற சொத்துக்களை கிரையம் பெற்ற தேதியிலிருந்து இந்த மனுதாரர் அனுபவம் செய்து வருகிறார். மனுதாரர் கிரையம் பெற்ற விவசாய நிலங்களில் பருவத்திற்கு ஏற்ப பயிர் செய்து விவசாயம் செய்து வருகிறார். மனுதாரர்

கிரையம் பெற்ற நிலங்களுக்கு அருகே மனுதாரரின் சகோதரர்களான பொன்னுசாமி, ராஜா, சேகர் மற்றும் சகோதரர்களின் வாரிசுகளுடன் பிரதிவாதிகளும் வசித்து வருகிறார்கள். மனுதாரர் கிரையம் பெற்ற நிலங்களில் பயிரிடும் பயிர்களை பிரதிவாதிகள் மனுதாரர் இல்லாத சமயத்தில் சேதப்படுத்துவதையும், ஆடு, மாடுகளை வைத்து சேதப்படுத்துவதையும் தொடர்ந்து செய்து வந்ததால் மனுதாரர் கிரையம் பெற்ற சொத்தை பாதுகாப்பதற்காக கடந்த 10.02.2022 ம் தேதியன்று வழக்கு சொத்துக்களை பாதுகாக்க கம்பி வேலி அமைக்க முற்பட்டார். அந்தசமயத்தில் பிரதிவாதிகள் கம்பிவேலி அமைக்கக்கூடாது என்று தகராறு செய்து தடுத்துவிட்டார்கள். இது குறித்து மனுதாரர் சங்ககிரி காவல் துறை கண்காணிப்பாளரிடம் கடந்த 11.02.2022 ஆம் தேதியன்று புகார் கொடுத்தார். மேற்கண்ட புகார் குறித்து விசாரணை செய்த காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களிடம் பிரதிவாதிகளும், அவர்களது குடும்பத்தாரும் இனிமேல் நான் விவசாயம் செய்யும் நிலத்தில் கம்பி வேலி அமைப்பதை தடுக்க மாட்டோம் என்றும், விவசாயம் செய்யும் பயிர்களை சேதப்படுத்த மாட்டோம் என்றும் உறுதி கூறி சென்றுவிட்டார்கள். மனுதாரர் வழக்கு சொத்துக்களில் தொடர்ந்து விவசாயம் செய்து வருகிறார். வழக்கு சொத்திற்கு கம்பி வேலி அமைப்பதற்காக கடந்த 18.03.2023 ம் தேதியன்று காலை 10 மணிக்கு வழக்கு சொத்திற்கு சென்ற போது வழக்கு சொத்தில் கம்பி வேலி அமைக்கக்கூடாது என்று பிரதிவாதிகள் மீண்டும் தகராறு செய்து நிறுத்திவிட்டார்கள். அது குறித்து மனுதாரர் சங்ககிரி காவல் ஆய்வாளர் அவர்களிடம் கடந்த 23.03.2023 ஆம் தேதியன்று கம்பி வேலி அமைக்க உரிய பாதுகாப்பு வழங்கும்படி புகார் கொடுத்தபோது, அவர் உரிமையியல் வழக்காக இருப்பதால் நீதிமன்றத்திற்கு சென்று பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தியதால் மனுதாரர் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்தில் மனுதாரருக்கு உரிமையும், பாத்தியதையும் நலனும் உள்ளது. வழக்கு சொத்தில் இந்த மனுதாரரை தவிர வேறு யாருக்கும் எந்தவித உரிமையும், பாத்தியமும் இல்லை. பிரதிவாதிகள் ஆள்பலமும், பணபலமும் உடையவர்கள். வாதி பெண் என்பதால் இந்த மனுதாரரை பிரதிவாதிகள் மிரட்டி வழக்கு சொத்திற்கு கம்பி வேலி அமைப்பதை தடுத்து வழக்கு சொத்துக்களை அபகரித்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்பட்டு வருகிறார்கள். அதனால்தான் இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவில் முதல் தோற்ற வழக்கு மனுதாரருக்கு ஆதரவாக உள்ளது. மனுதாரர் இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் பெற முகாந்திரம் உள்ளது. இடைக்கால உத்தரவு இந்த மனுதாரருக்கு ஆதரவாக வழங்காவிட்டால் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்ற வாதம் முன்வைக்கப்பட்டது.

7) எதிர்மனுதாரர்கள் தரப்பில் இந்த வழக்கு சொத்து குறித்து 2ம் பிரதிவாதியின் தந்தையான ராஜா என்பவர் அவரது தந்தை கந்தசாமி கவுண்டர் (இறப்பு), இவ்வழக்கின் வாதியான விஜயா மற்றும் வாதி கிரையம் பெற்றதாக கூறும் ரகுபதி ஆகியோர்கள் மீது ஏற்றதை ஆற்றுதல் மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி சமூகம் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.61/2015 என்ற வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி வழக்கில் இந்த வழக்கின் வாதி ஆஜராகி தனது வழக்குரைஞர் மூலம் வழக்கினை தொடர்ந்து நடத்தி வருகிறார். மேற்கண்ட சங்கதிகளை குறிப்பிட்டால் இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பெற முடியாது என்பதால் தீய எண்ணங்கொண்டு அவற்றை பற்றி வழக்குரையில் கூறாமல் மறைத்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கு எண்.61/2015ன் வழக்குரை மற்றும் வாதி தாக்கல் செய்த பதிலுரை இந்த எதிருரை ஆவணமாக தாக்கல் செய்யப்படுகிறது. வாதி கூறுவது போல் வழக்கு சொத்தில் வாதி அனுபவத்தில் இல்லை. வழக்கு சொத்தானது வாதியின் அனுபோகத்தில் உள்ளது என்பது தவறான ஒன்றாகும். வழக்கு சொத்து மற்றும் இதர சொத்துக்களில் 2ம் பிரதிவாதியின் தந்தையான ராஜா, ராஜாவின் சகோதரர்கள் மற்றும் அவர்களது வாரிசுகளிடமே அனுபவம் உள்ளது. மேற்படி நிலங்களை அவர்கள்தான் அனுபவம் செய்து வருகிறார்கள். வாதி தாக்கல் செய்துள்ள பட்டாவானது வாதியின் சகோதரர்களான பொன்னுசாமி, ராஜா மற்றும் சேகர் ஆகியோர்களின் பெயரில் கூட்டாக உள்ளது. மேற்கண்ட நபர்களை வழக்கில் தரப்பினராக சேர்த்தால் ஒருதலைபட்ச உத்தரவு கிடைக்காது என்பதால் அவர்கள் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை. வாதியின் சகோதரர்களான பொன்னுசாமியின் மகன் 1ம் பிரதிவாதியும், ராஜாவின் மகன் 2ம் பிரதிவாதியும், சேகரின் மகன் 3ம் பிரதிவாதியும் ஆவார்கள். மேற்கண்ட சங்கதிகளை கூட வாதி முழுமையாக கூறாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதி அவரது பிரமாணப்பத்திரிக்கையில் 2வது பத்தியில் " 1ம் பிரதிவாதி வாதியின் சகோதரர் பொன்னுசாமியின் மகனாவார். 2,3 பிரதிவாதிகள் பொன்னுசாமியின் பேரன்கள் ஆவார்கள்" என்றும், அதே பத்தியில் 12வது வரியில் " நான் கிரையம் பெற்ற நிலங்களுக்கு அருகே வாதியின் சகோதரர்களான பொன்னுசாமி, ராஜா, சேகர் மற்றும் சகோதரர்களின் வாரிசுகளுடன் பிரதிவாதிகளும் வசித்து வருகிறார்கள்." என்றும் குறிப்பிட்டுள்ளார். வாதி, பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலேயே உறவுமுறையை கூட சரியாக கூறாமலும், மறைத்தும் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்துக்கள் அமைந்துள்ள தப்பக்குட்டை கிராமமானது மகுடஞ்சாவடி காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியாகும். வாதி அவரது பிரமாண பத்திரிக்கையின் 4வது பத்தி 5வது வரியில் " ஆதலால் வாதி சங்ககிரி காவல் ஆய்வாளர் அவர்களிடம்

23.03.2023 அன்று கம்பி வேலி அமைக்க உரிய பாதுகாப்பு வழங்கும்படி புகார் கொடுத்தார்" என்று கூறியுள்ளார். வாதி தாக்கல் செய்துள்ள ஆவணப்பட்டியல் 4 வது ஆவணமானது சங்ககிரி காவல் ஆய்வாளரிடம் கொடுத்தது போலவே உள்ளது. மேற்படி நிகழ்வுகளே வாதி கூறுவது போல் எந்தவித நிகழ்வுகளும் நடைபெறவில்லை என்பதினை உணர்த்துகிறது. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள 11.02.2022ம் தேதியிட்ட ஆவணத்தின் 9 வது வரியில் "இவ்வாறு இருக்க எனது சகோதரர் பொன்னுசாமி, மகன்கள் செல்வம், ராஜா, இவரது மகன்கள் சுரேஷ், பிரகாஷ் மற்றும் சேகர் இவரது மகன்கள் மணிகண்டன் எல்லோரும் எனது நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து கொண்டு நிலத்தை விவசாயம் செய்யவிடாமல் தடுப்பதாகவும்" கூறியுள்ளார். அதேபோல் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள 21.03.2023 ஆம் தேதியிட்ட ஆவணத்தின் பொருளில் " எனக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்ட சொத்திற்கு கம்பி வேலி அமைப்பதை தடுக்கும் எனது சகோதரர்கள் பொன்னுசாமி, ராஜா, சேகர் மற்றும் அவர்களது மகன்களான பொன்னுசாமி மகன் செல்வம், ராஜாவின் மகன் சுரேஷ், சேகரின் மகன் மணிகண்டன் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி மனு" என்று குறிப்பிட்டுள்ளார். உண்மை சங்கதிகளை மறைத்தும், வழககு சொத்து குறித்த முந்தை வழக்கினை மறைத்தும், அவசிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினாலும், வழக்கிற்கு வழக்கு மூலங்கள் இல்லாத காரணத்தினாலும் இந்த மனுவானது அதிகப்படியான செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்ற வாதம் முன்வைக்கப்பட்டது.

8) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் அசல் வழக்கு எண்.87/2023 ஆனது நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. அசல் வழக்கில் இம்மனுதாரர் வாதி ஆவார். எதிர்மனுதாரர்கள் பிரதிவாதிகள் ஆவார்கள்.

9) இரு தரப்பில் முன்வைக்கப்பட்ட சங்கதிகள் மற்றும் வாதங்களை நன்கு பரிசீலனை செய்கையில் மனுதாரர் அசல் வழக்கில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்தையையே இடைநிலை மனுவிலும் கோரியுள்ளார். மனுதாரர் அசல் வழக்கில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரமும், இந்த இடைநிலை மனுவில் கோரியுள்ள இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரமும் ஒரே மாதிரியான தன்மை கொண்டவையாகவும், ஒத்த இயல்பு உடையனவாகவும் உள்ளது. எனவே, மனுதாரர் எழுப்பியுள்ள பிரச்சனையும், அதன் தகுதிபாடுகளையும் இடைநிலை மனுவில் தீர்ப்பது என்பது ஒரு சிறிய வழக்கு விசாரணையை நடத்துவதற்கு ஒப்பானதாக இந்த நீதிமன்றம் கருதுகிறது.

10) மேலும், இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும், தரப்பினர்களின் வாதங்களையும் கருத்தில் கொள்கையில் மேற்படி சங்கதிகள் மற்றும் பிரச்சனைகள் குறித்து தரப்பினர்கள் முன்வைக்கும் சாட்சியங்களின் அடிப்படையிலேயே அவற்றை தீர்மானிக்க முடியும். மேலும், இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையானது சங்கதிகள் தொடர்பான எழுவினாவாக உள்ளது என தெரிய வருகிறது.

11) மாண்புமிகு உச்சநீதிமன்றம் " Anand Prasad Agarwalla Vs Tarkeshwar Prasad and Others, reported in 2001 5) SCC 568" என்ற வழக்கில் " It may not be appropriate for any court to hold mini trial at the stage of grant of temporary injunction." என்ற சட்ட நிலைபாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட சட்ட நிலைப்பாட்டின் அடிப்படையில் மனுதாரரால் காண்பிக்கப்பட்டுள்ள முதல் தோற்ற வழக்கானது இரு தரப்பு வாதங்களின் அடிப்படையில் வழக்கு விசாரணையின் மூலம் தான் தீர்மானிக்க இயலும் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. இச்சூழ்நிலையில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் மேற்கண்ட வழக்கில் குறிப்பிட்டுள்ளபடி இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்க ஒரு சிறிய வழக்கு விசாரணையை நடத்த அவசியம் இல்லை என்று முடிவு செய்கிறது.

12) முடிவாக, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, நகல் எடுக்கப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 31.01.2024 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R RADHAKRISHNAN

Digitally signed by R RADHAKRISHNAN
Date: 2024.01.31 18:09:38 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.

**பிற்சேர்க்கை:-**

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் :-** இல்லை

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :-**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 13.09.2014 | கிரையப்பத்திரம் - நகல் |
| ம.சா.ஆ.2 | 28.08.2020 | கிரையப்பத்திரம் - நகல் |
| ம.சா.ஆ.3 | 11.02.2022 | சங்ககிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு மனுதாரரால் கொடுக்கப்பட்ட புகார் கடிதம் - நகல் |
| ம.சா.ஆ.4 | 21.03.2023 | சங்ககிரி காவல் ஆய்வாளர் அவர்களுக்கு மனுதாரரால் கொடுக்கப்பட்ட புகார் கடிதம் - நகல் |
| ம.சா.ஆ.5 | 24.03.2023 | அஞ்சலக ஒப்புதல் அட்டை - அசல் |
| ம.சா.ஆ.6 | 24.03.2023 | அஞ்சலக ஒப்புதல் அட்டை - அசல் |
| ம.சா.ஆ.7 | 24.03.2023 | அஞ்சலக ஒப்புதல் அட்டை - அசல் |
| ம.சா.ஆ.8 | 08.03.2023 | புல எண்.162/7A க்குரிய பட்டா - இணையவழி நகல் |

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :-** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :-**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | --- | அசல் வழக்கு எண்.61/2015 ன் வழக்குரை - நகல் |
| எ.ம.சா.ஆ.2 | --- | அசல் வழக்கு எண்.61/2015 ன் எதிர்வழக்குரை - நகல் |

R RADHAKRISHNAN
Digitally signed by R RADHAKRISHNAN
Date: 2024.01.31 18:09:53 +0530

மா.உ.நீ.,
சங்ககிரி.